பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 05 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u> -

1. ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுதத்பபட்டோருக்கான இடஒதுக்கீட்டை பாதுகாக்க பிஜேபி அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

2. பிஜேபி, காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுமே ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குயினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக செயல்பட்டு வருவதாக பகுஜன் சமாஜ் தலைவர் செல்வி மாயாவதி குற்றம்சாட்டியுள்ளார்.

3. ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் தீவிரவாதத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளால் உலகளாவிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

4. இந்தியாவும் - ஸ்வீடனும் அனைத்துத் துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

5. ஐ எஸ் எல் கால்பந்து இறுதி ஆட்டத்தில் இன்று மோகன்பெஹான் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தல் மூன்றாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைய உள்ள நிலையில் அரசியல் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குஜராத் மாநிலம் சோட்டா, உதேப்பூர், **Vansda** ஆகிய இடங்களில் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவர் திரு அமித்ஷா பங்கேற்று பேசினார்.

ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுதத்பபட்டவர்களுக்கான இடஒதுக்கீடு அரசியல் சாசன உரிமை என்றும், இதனை பாதுகாக்க பிஜேபி அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அவர் கூறினார்.

அனைத்துத் தரப்பு மக்களுக்குமான வளர்ச்சியில் தமது கட்சி அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு குறித்து காங்கிரஸ் தவறான தகவல்களை பரப்பி வருகிறது என்று அவர் குற்றம்சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட தவறான கொள்கைகளால் ஏழை எளிய மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டததாகவும் அவர் குறை கூறினார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் மத்தியில் ஆட்சியிலிருந்த பிஜேபி அரசு சிறப்பாக செயல்பட்டு, மக்களை பெருந்தொற்றிலிருந்து மீட்டதாகவும், பொருளாதாரத்தையும் பாதிப்பிலிருந்து மீட்டதாகவும் திரு அமித்ஷா குறிப்பிட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் செல்வி மாயாவதி, உத்திரபிரதேச மாநிலம் ஆக்ரா மக்களவைத் தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், பணவீக்கம் மற்றும் வேலைவாய்ப்பின்மையால் மக்கள் கடும் இன்னலுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவித்தார்.

பிஜேபி-யின் தவறான பொருளாதார கொள்கைகளால் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் பாதிக்படைந்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

பிஜேபி, காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுமே ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குயினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

வேலைவாய்ப்பை உருவாக்குவதன் மூலமே நாட்டிலிருந்து வறுமையை அகற்ற முடியும் என்றும் செல்வி மாயாவதி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தற்போது நடைபெற்று வரும் மக்களவைத் தேர்தல் நடைமுறைகளை 23 நாடுகளை சேர்ந்த தேர்தல் ஆணையத்தின் பிரதிநிதிகள் பார்வையிடவுள்ளனர்.

பூட்டான், மங்கோலியா, ஆஸ்திரேலியா, மாலத்தீவு, சிலி, உஸ்பெகிஸ்தான், கம்போடியா, துனிஷியா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த பிரதநிதிகள் இதில் அடங்குவர்.

இந்த பிரதிநிதிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நாளை கலந்துரையாடுகின்றனர்.

இதன்பின்னர், அவர்கள் மகாராஷ்ட்ரா, கோவா, குஜராத், கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசத்திற்கு குழுக்களாக பிரிந்து சென்று தேர்தல் நடவடிக்கைகளை பார்வையிடவுள்ளனர்.

வரும் ஒன்பதாம் தேதி வரை அவர்கள் இப்பணியை மேற்கொள்ளவுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் தீவிரவாதத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளால் உலகளாவிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

பிரான்ஸின் லயான் நகரில் நடைபெற்ற 19-வது இன்டர்போல் அமைப்புத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட மத்திய புலனாய்வுப் பிரிவின் இயக்குநர் திரு பிரவின்சூட், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் ஒருங்கிணைந்து செயல்படுவதால் பெரிய அளவிலான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாத சிந்தனைகள் ஆன்லைன் மூலம் பரப்பப்படுவது குறிதது அவர் எச்சரிக்கை விடுத்தார்.

தீவிரவாதத்தை நல்லது தீயது என்று பிரித்துப் பார்க்க முடியாது என்றும் திரு பிரவின் சூட் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் 136 நாடுகளைச் சேர்ந்த தேசிய புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொணடனர்.

திட்டமிட்ட குற்றங்கள், தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல், பணமோசடி மற்றும் இணையதளம் வாயிலான நிதி சார்ந்த குற்றங்கள் ஆகியவற்றை தடுப்பது குறித்தும் இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

துபாயில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் இந்திய வம்சாவழியினருடனான சந்திப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இந்திய தூதர் திரு சதிஷ்குமார் சிவன் தலைமையில் நடைபெற்ற இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட இந்தியர்கள் பங்கேற்று தங்களது குறைகள் மற்றும் தூதரகத்தின் உதவிகள் குறித்த கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இந்திய தூதரகத்தின் சிறப்பான செயல்பாட்டுக்கு உதவி வரும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் திரு சதிஷ்குமார் சிவன் கூறினார்.

இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் இந்திய வம்சாவழியினருக்கு சட்ட ரீதியிலான உதவிகள் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது.

பாஸ்போர்ட் மற்றும் விசா பிரச்சினைகள், கல்வி, பணிப்பெண்கள் உள்ளிட்டவை குறித்த இந்திய வம்சாவழியினரின் கோரிக்கைகள் இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் முன் வைக்கப்பட்டன.

[]<<<>>>[]

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஐந்து நாள் பயணமாக இன்று இமாச்சல பிரதேசம் சென்றுள்ளார்.

சிம்லாவில் உள்ள கல்யாணி ஹெலிகாப்டர் தளத்தில் அம்மாநில ஆளுநர் திரு சிவ்பிரதாப் சுக்லா, முதலமைச்சர் திரு சுக் விந்தர்சிங் சுகு ஆகியோர் அவரை வரவேற்றனர்.

அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றது.

நாளை **Kufri** நீர் பிடிப்புப் பகுதிகளை அவர் பார்வையிடுகிறார்.

பின்னர் தர்மசாலா செல்லும் குடியரசுத் தலைவர், அங்குள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

[]<<<>>>[]

இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வுநாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 557 நகரங்களில் நடைபெறவுள்ள இந்த தேர்வை 24 லட்சத்திற்கும் மேற்பட்டோர் எழுதவுள்ளனர்.

வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் இந்த தேர்வு நடைபெறவுள்ளது.

பிற்பகல் இரண்டு மணி முதல் மாலை மணி 5-20 வரை இந்த தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்வில் பங்கேற்போர் தங்களுக்கான புகைப்படத்துடன் கூடிய அனுமதி சீட்டை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அடையாள அட்டையில் புகைப்படம், தேர்வு எழுதுவோரின் கையெழுத்து, தேர்வு எண், பார்கோடு ஆகியவை இடம்பெற்றிருப்பதால் இந்த தகவல்கள் தெளிவாக தெரியும் அளவுக்கு பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் தேசிய தேர்வுகள் முகமை தெரிவித்துள்ளது.

தேர்வு எழுதுவோர் தேர்வுக்கூடத்துக்கு முன்கூட்டியே வந்திருந்து அனைத்து நடைமுறைகளையும் முடித்துக் கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தியாவும் - ஸ்வீடனும் அனைத்துத் துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளன.

ஸ்வீடனின் ஸ்டாக்கோம் நகரில் நடைபெற்ற இந்தியா - ஸ்வீடன் வெளியுறவுத்துறை அதிகாரிகள் நிலையிலான ஏழாவது ஆலோசனைக் கூட்டத்தில் வர்த்தகம், முதலீடு மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

குறை மின் கடத்திகள், பசுமை எஃகு மற்றும் பசுமை மின்கலன்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை விரிவுபடுத்துவது குறித்தும், அவற்றை ஆக்கப்பூர்வமாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் இணையதள குற்றங்களை தடுப்பது தொடர்பாகவும் இரு நாடுகளும் கருத்துக்களை முன்வைத்தன.

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஐ நா பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்களை கொண்டு வருவதில் இரு நாடுகளும் ஒருமித்த கருத்தை முன் வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு வெற்றிகரமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய – ஐரோப்பிய தாராள வர்த்தக ஒப்பந்தம் உறுப்பு நாடுகளுக்கு பரஸ்பரம் பயன்தரத்தக்க வகையில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களும், இந்தியா - ஸ்வீடன் அதிகாரிகள் நிலையிலான கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.,

இந்திய தரப்பில் வெளியுறவுத்துறை செயலர் திரு பவன் கபூரும், ஸ்வீடன் தரப்பில் அந்நாட்டின் வெளியுறவுத்துறை செயலர் திரு ஜன் **Knutson** -னும் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

வெங்காய ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு நீக்கியுள்ளது.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த மாதம் ஆறு நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்த மத்திய அரசு தற்போது ஏற்றுமதிக்கான தடையை முழுமையாக நீக்கியுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெய்யில் இன்று முதல் தொடங்கியது.

இதையடுத்து மாநிலத்தின் உள்மாவட்டங்களில் வெப்பம் இயல்பைவிட இரண்டு முதல் நான்கு டிகிரி செல்ஸியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமிழகத்தில் நீலகிரி, தருமபுரி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்துள்ளது.,

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டி இறுதி ஆட்டத்தில் இன்று மோகன்பெஹான் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது. கொல்கத்தாவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

**Luxembourg** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tarashah, Chirag Sen, Darshan Pujari,** மற்றும் **Devika Sihag** ஆகியோர் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் ஸ்விட்சர்லாந்தின் **Milena schnider** -ஐ 21-18, 21-16 என்ற செட் கணக்கில் வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Devika Sihag -** பல்கேரியாவின் **Kaloyana nalbantova** -வை 21-12, 21-16 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா இதுவரை 14 பதக்கங்களை உறுதி செய்துள்ளது.

***<u>End of News</u>***